வடாற்காடு மாவட்டத்தில் மையச் சமயற்கூடம்

*520 வினா—திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு கல்வி—தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆர்க்காடு மாவட்டத்தில் மையச் சமையற்கூடம் அமைப்பதற்கென அமெரிக்க உலக கூட்டுறவு (கேர்) நிறுவனத்தால் தேர்ந்து எடுக்கப்பட்டு, அம் மாவட்ட கலெக்டரிடமிருந்து பரிந்துரையுடன் வந்துள்ள இடங்களின் விவரங்கள் யாவை ?

(இ) அவை எப்போது எந்த எந்த இடங்களில் ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) :—அடுத்த ஆண்டில் வடஆற்காடு மாவட்டத்தில் மூன்று மையச் சமயற்கூடங்கள் காட்பாடி ஒன்றிப்புகளில் அமைக்கப்படும். வாலாஜா, வேம்பாக்கம் ஆகிய ஊராட்சி

கல்வி இலாகா அலுவலர்கள்

*521 வினா—திரு. பி. வேலுசாமி : மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்வி இலாக்காவில் வேலை பார்க்கும் ஆசிரியர்கள், மற்றுமுள்ள அதிகாரிகள் சிப்பந்திகள் வேலைக்கு சேர்ந்து எவ்வளவு ஆண்டுகளில் நிரந்தரம் செய்யப்பட வேண்டும் என்ற வரம்பு சர்க்கார் வகுத்துள்ளது ?

(இ) ஆம் எனில், நிரந்தரம் செய்யப்பட வேண்டிய வரம்பு கடந்தும் வேலை நிரந்தரம் செய்யப்படாமல் உள்ளவர்களுக்கு நிரந்தரம் செய்ய சர்க்கார் எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.

திரு. பி. வேலுசாமி : இந்தக் கல்வி இலாகாவில் பணிபுரிகிற ஆய்வாளர்கள், துணை ஆய்வாளர்கள் இவர்கள் எட்டு ஆண்டுகள், பத்தாண்டுகள் சர்வீஸாகியும் கூட நிரந்தரம் செய்யப்படாமல் இருக்கிறார்கள். ஆகவே அப்படிப்பட்டவர்களை நிரந்தரம் செய்வதற்கு முயற்சி உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எப்போதைக்கெப்போது நிரந்தரம் செய்யவேண்டும், கன்பர்மேஷன் அல்லது ரெகுலரைஸேஷன் செய்ய வேண்டும் என்பதற்கு விதிமுறைகள் இருக்கின்றன. பொதுவாக இதில் சிக்கல் ஏற்படுவது எந்த வேலையில் நியமிக்கிறோமோ அந்த வேலை நிரந்தரமாகயிருந்தால் உடனடியாக நிரந்தரமாக்கப்படுகிறது, அது இடைக்கால வேலையாக இருந்தால், அதாவது டெம்பரரியாக இருந்தால், கொஞ்சம் காலதாமதம் ஏற்படுகிறது. அப்படிப்பட்ட காலதாமதம் ஏற்படாமல் அடிக்கடி பரிசீலித்து கன்பர்மேஷன் அல்லது ரெகுலரைஸேஷன் செய்ய வேண்டுமென்று சர்க்கார் அறிவித்து வருகிறது.

திரு. பெ. சீனிவாசன் : கன்பர்மேஷன் அல்லது ரெகுலரைஸேஷன் செய்வதற்கு ஏதாவது குறிப்பிட்ட விதிகள் இருக்கின்றனவா அல்லது, குறிப்பிட்ட காலவரை இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஒவ்வொரு வேலைக்கும் தனித் தனி விதிமுறைகள் இருக்கின்றன.

திரு. கு. கிருஷ்ணமூர்த்தி : ஜில்லா போர்டிலிருந்து கல்வி இலாகாவிற்கு மாற்றப்பட்ட அதிகாரிகள், ஆசிரியர்கள் இவர்களுக்கும் கல்வி இலாகாவில் பணிபுரிகிற ஆசிரியர்கள், மற்றவர்களுக்கும் இடையே தாரதம்மியம் இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?